வேலூர் மாவட்டம் அணைக்கட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலை மற்றும் தொடக்கப்பள்ளிகளுக்கு 104கியாஸ் அடுப்புகளை தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, ஒன்றிய குழுத்தலைவர் சி.பாஸ்கரன், துணைத் தலைவர் சித்ரா குமார் பாண்டியன், ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில்

27 லட்சம் தொழிலாளர்களை நீக்குவதா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் ஒத்தி வைப்புத் தீர்மானம்!

புதுடெல்லி, டிச.6- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் (MGNREGA) 27 லட்சம் தொழிலாளர்கள் நீக்கப்பட்டதைக் கண்டித்து ஒன்றிய அரசின் அவசரக் கவனத்தைக் கோரி நாடாளுமன்ற மக்களவையில் ஒத்தி வைக்கும் தீர்மானத்தை வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன்வைத்தார்.

வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மக்களவையில் விதி 332ன் கீழ் நாடாளுமன்ற மக்களவை நடவடிக்கையை ஒத்திவைக்கும் தீர்மானம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

10 அக்டோபர் முதல் 14 நவம்பர் 2025 வரையிலான 35 நாட்களில் நாடு முழுவதும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் (MGNREGA) தரவுத் தளத்திலிருந்து 27 லட்சம் தொழிலாளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மட்டும் 30,529 தொழிலாளர்கள் எந்த முன் அறிவிப்பும் இல்லாமல் நீக்கப்பட்டுள்ளனர்.

இது eKYC, ஆதார் இணைப்பு, NMMS app போன்ற கட்டாய டிஜிட்டல் நடைமுறைகளால் உருவான பேரழிவு என எம்.பி குறிப்பிட்டார்.

இதன் பாதிப்புகள்: இந்த நடவடிக்கை காரணமாக பெண்கள் முதியோர் மற்றும் விதவைகள், ஸ்மார்ட் போன்/இணைய வசதி இல்லாத கிராம மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முக்கிய கோரிக்கைகள்:

நீக்கப்பட்ட அனைத்து ஜாப்கார்டுகளையும் உடனடியாக மீண்டும் செயல்படுத்துதல், தொலைதூர கிராமங்களில் டிஜிட்டல் கட்டாயங்களை நிறுத்துதல், தொழிலாளர்களின் கூலித் தொகை தாமதமின்றி வழங்குதல் "டிஜிட்டல் இந்தியா" என்ற பெயரில் ஏழைகளை டிஜிட்டலாக அழிக்க முடியாது" என கதிர் ஆனந்த் எம்.பி வலியுறுத்தினார்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் இன்று (06.12.2025- சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 1. 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் கழகத் தலைவர் பங்கேற்கும் வடக்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்பது.

2. SIR இறுதிக் கட்டப் பணிகள்

3. கழக ஆக்கப்பணிகள்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

தமிழ்நாட்டில் அம்ருத் 2.0–ன் தற்போதைய நிலை என்ன?

கள்ளக்குறிச்சி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நகரங்கள் எண்ணிக்கை எவ்வளவு?

நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 6- கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டில் அம்ருத் 2.0 -ன் தற்போதைய நிலை, குறிப்பாக கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நகரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மேற்கூறிய திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

நீர் வழங்கல், கழிவுநீர், வடிகால், பசுமையான இடங்கள் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து போன்ற முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்படும் நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் என்ன?

திட்ட செயல்படுத்தலில் ஏதேனும் தாமதங்கள் அல்லது குறைபாடுகள் பதிவாகியுள்ளனவா, அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன?

ஒதுக்கப்பட்ட சமூகங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மேம்பட்ட நகர்ப்புற வசதிகளை சமமாக அணுகுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நடத்தும் – துணை முதல்வர்

உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம்!

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை!

சென்னை, டிச. 6 - தி.மு.க. கலை - இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் திராவிட இளந்தென்றல் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா கருத்தரங்கம் வருகின்ற 13.12.2025 - சனிக்கிழமை அன்று காலை 9 மணி அளவில் கோவை, சிங்கா நல்லூர் ஸ்ரீ சாய் (விவாகா) திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு பறை இசை முழக்கமும், கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் அவர்களின் இயக்கப் பாடல்களும், புதுகை பூபாலம் குழுவினரின் கலை நிகழ்ச்சியும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து பேரவை மாநில துணைச் செயலாளர் திருமதி மீனா ஜெயக்குமார் தலைமையில் பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் தொடக்க உரையாற்றுவார்கள். கழகத் துணைப் பொதுச் செயலாளர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். கழக மேற்கு மண்டல பொறுப்பாளர் மேனாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி நலத்திட்ட உதவிகள் வழங்கிச் சிறப்புரை ஆற்றுவார்கள்.

தொடர்ந்து மாவட்ட திமுக பொறுப்பாளர்கள் துரை செந்தமிழ்ச் செல்வன், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், பாராளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ப. ராஜ் குமார், கே. ஈஸ்வரசாமி, பேரவை மாநில நிர்வாகிகள் எம்.ஆர்.ஆர். வாசுவிக்ரம் வண்ணை அரங்கநாதன், தில்லைசெல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் கருத்தரங்கில் திரைப்பட இயக்குநர் கரு. பழனியப்பன் அவர்கள் "யாரால்! யாரால்!! யாரால்!!!" என்ற தலைப்பிலும், மூத்த ஊடகவியலாளர் "தமிழ்க்கேள்வி செந்தில்வேல்" திராவிடம் 2.0 ஏன்? எதற்கு? என்ற தலைப்பிலும், பேரவை துணைத் தலைவர் போஸ்வெங்கட் "ஒரு கல் ஒரு தலைமை" என்ற தலைப்பிலும், பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா. உமாபதி "சனாதனச் சத்ரு" என்ற தலைப்பிலும் கருத்துரை நிகழ்த்த உள்ளார்கள்.

பேரவை மாவட்ட அமைப்பாளர் துரை கதிரவன் வரவேற்புரையாற்றுவார், எஸ்.எம்.எஸ். சுதாகரன் நன்றியுரை ஆற்றுவார்.

பிற்பகல் 2 மணி அளவில் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாநில நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் (எனது) கூட்டம் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர்) தலைமையில் நடை பெறுகிறது.

பேரவைத் துணைச் செயலாளர்கள் கவிஞர் நன்மாறன், எழில்மாறன், செல்வேந்திரன், கே.வி. குப்பம், சி.கோபி, கலைமாமணி ஜாகிர் உசேன், எம்.எஸ். ஹரிபாபு, என். எஸ். மாதேஸ்வரன் ஆகியோர் மாநில நிர்வாகிகளுடன் இணைந்து கருத்தரங்கப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கழக உடன்பிறப்புகள் அனைவரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி மங்களூர் வடக்கு ஒன்றியம் எஸ்.நரையூர் கிராமத்தில் நபார்டு மற்றும் கிராமச்சாலைகள் திட்டம் சார்பில் ரூ.441.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய உயர்மட்ட பாலம் அமைக்கும் பணியை தொழிலாளர் நலன்திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்தார். உடன் அரசு அலுவலர்கள் மற்றும் கே.என்.டி.சங்கர், கே.குமணன், இராமதாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

பழங்குடியின தொழில்முனைவோருக்கான

முதலீட்டு உதவித் திட்டத்தில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

நாடாளுமன்றத்தில் — ஈரோடு கே.இ. பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.6- பழங்குடியின தொழில் முனைவோருக்கான முதலீட்டு உதவித் திட்டத்தில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு எனவும், முதலீடு பெற்ற நிறுவனங்களும் தகுதியான நிறுவனங்களா என்பதில் சந்தேகம் என்றும், திட்டத்தை சரியாகவும், வெளிப்படையாகவும் நடைமுறைப்படுத்த எம்.பி. கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.

பழங்குடியின தொழில் முனைவோரை ஊக்குவிக்க முதலீட்டு உதவி வழங்கும் Venture Capital Fund for Scheduled Tribes (VCFST) புள்ளிவிவரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு எந்தவிதத்தில் அது பயனளித்துள்ளது ஆகியவை குறித்து, ஒன்றிய பழங்குடியின விவகாரங்கள் துறையிடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அதன் அமைச்சர் அளித்துள்ள பதில்கள், இந்த திட்டம் தமிழ்நாடு உட்பட பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பல மாநிலங்களை புறக்கணித்து வருவதையும், பயன்பெற்ற நிறுவனங்களின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகத்தையும் வெளிக்கொண்டு வந்துள்ளது.

உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(a) VCFST திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை இத்திட்டத்தின் கீழ் ஆதரவு பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை மாநில வாரியாக எவ்வளவு?

(b) VCFST திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவுடன் ஒவ்வொரு மாநிலத்திலும் ஆதரவு அளிக்கப்பட்ட புதிய நிறுவனங்கள் (Start ups) அல்லது தொழில்முனைவோர் திட்டங்களின் விவரங்கள் மாநில வாரியாக என்ன?

(c) அதே காலகட்டத்தில் VCFST திட்டத்தின் கீழ் ஆதரவு பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(d) தமிழ்நாட்டைச் சேர்ந்த பயனாளிகளின் விவரங்கள், ஆதரவு அளிக்கப்பட்ட புதிய நிறுவனம்/தொழில்முனைவோர் முயற்சி வகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவி விவரங்கள் மாவட்ட வாரியாக என்ன?

ஒன்றிய அமைச்சர் பதில்!

(a) & (b): VCFST திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை ஆதரவு பெற்ற பயனாளிகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

சத்தீஸ்கர்:

பயனாளி: ஹேமல் ஃபுட் புராடக்ட் பிரைவேட் லிமிடெட் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவு: 3.41 கோடி

தெலங்கானா:

பயனாளி: ஹார்லீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி உதவியின் அளவு: 5.00 கோடி

(c) & (d): இன்றைய தேதி வரை VCFST திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் எந்தப் பயனாளியும் இல்லை.

1. பல பழங்குடி மாநிலங்கள் புறக்கணிப்பு:

இந்த திட்டம் 2024 ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை, சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய இரண்டே மாநிலங்களில், இரண்டு நிறுவனங்களுக்கு மட்டுமே நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது கவலையும் அதிர்ச்சியும் அளிக்கக்கூடிய புள்ளி விவரம்.

வடகிழக்கில், மிசோரம், நாகாலாந்து, மேகாலயா, அருணாச்சல் பிரதேசம் ஆகியவை, பழங்குடி மக்களை பெரும்பான்மையாகக் கொண்டவை. இதுபோக, லட்சத்தீவுகள், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி ஆகிய யூனியன் பிரதேசங்களும் பழங்குடி பெரும்பான்மை கொண்டவை.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் கடந்த ஆண்டில் ஒரே ஒரே ஒரு நிறுவனம் கூட இந்த திட்டத்தில் பயன்பெறவில்லை. இதன் மூலம், ஒன்றிய அரசு இந்தப் பகுதிகளை முற்றிலுமாக புறக்கணித்துள்ளது என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது.

2. பயன்பெற்ற நிறுவனங்களும் தகுதியானவையா எனச் சந்தேகம்:

சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலும், அங்கு இருக்கும் பழங்குடி மக்கள் தொகைக்கு ஏற்ப சரியான விகிதத்தில் நிறுவனங்கள் பயன் பெறவில்லை. சத்தீஸ்கரில், ஹேமல் ஃபுட் புராடக்ட் பிரைவேட் லிமிடெட் (Hemal Food Product Pvt Ltd.), தெலங்கானாவில் ஹார்லீஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (Harleys India Pvt. Ltd.) ஆகிய இரண்டு நிறுவனங்கள் மட்டுமே பயன்பெற்றுள்ளன.

இந்த இரண்டு நிறுவனங்களும் இயங்கி வருவதற்கான தடயங்கள் பொதுவெளியில் காணக்கிடைக்கவில்லை. இதற்கான அதிகாரப்பூர்வ இணையதளங்கள், சமூக வலைதளப் பக்கங்கள் எதுவும் தென்படவில்லை. இரண்டும் அமைச்சகத்தின் தகவல்களின் படி, உணவுப்பொருள் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள். இவற்றின் தயாரிப்புப் பொருட்களைப் பற்றிய தகவலும் இல்லை.

இப்படிப்பட்ட முகமில்லா நிறுவனங்களுக்கு, 3.41 கோடி, 5 கோடி ரூபாய் (இது தான் உச்சபட்ச முதலீட்டு உதவித்தொகை) வழங்கியிருப்பது, திட்டத்தின் செயல்பாட்டின் மீது சந்தேகங்களை எழுப்புகிறது.

3. தமிழ்நாட்டிற்கு இதுவரை 'பூஜ்ஜியம்' பயனாளர்கள்:

தமிழ்நாட்டின் பழங்குடியினர் மக்கள் தொகை கிட்டத்தட்ட 8 லட்சம் ஆகும். இந்த எண்ணிக்கை குறைவு என்றாலும், தமிழ்நாடு தொழில்முனைவில் இந்தியாவிலேயே முன்னணியில் இருக்கும் மாநிலமாக திகழ்கிறது. தென்னிந்தியாவில் முதன் முறையாக 1 டிரில்லியன் டாலர்' பொருளாதார இலக்கை அறிவித்து செயல்பட்டு வரும் மாநிலம். இத்துடன் Startup TN போன்ற பல திட்டங்களின் வழியே, மாநிலத்தின் அனைத்து மட்டங்களிலும் தொழில் முனைவு கனவை விதைத்துள்ளது.

பல பழங்குடியின தொழில்முனைவாளர்கள் தமிழ்நாட்டின் பழங்குடி மண்டலமான நீலகிரி, மற்றும் அதை ஒட்டிய கோவை பகுதிகளில் இருந்து, மாநில அரசு நடத்தும் தொழில்முனைவாளர் நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்துகொள்கிறார்கள். அங்கே அவர்களின் ஐடியாக்களையும், தயாரிப்புப் பொருட்களையும் முன்னிறுத்தி, தங்களது Startup நிறுவனங்களை விளம்பரப்ப டுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், இது வரை தமிழ்நாட்டில் ஒரே ஒரு பழங்குடியின தொழில் முனைவாளரைக் கூட, ஒன்றிய அரசு திட்டத்தில் சேர்க்கவில்லை என்பது அதிர்ச்சியளிக்கிறது. இதன் மூலம், தமிழ்நாட்டின் பழங்குடி தொழில்முனைவோருக்கு கிடைக்கவேண்டிய மறுக்கப்பட்டிருக்கிறது. நியாயமான ஆதரவு

இத்திட்டத்தின் செயல்பாட்டை, பழங்குடியினர் விவகாரங்கள் துறை, உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன். பழங்குடியினர் வசிக்கும் அனைத்து மாநிலங்களிலும் சமமான வளர்ச்சி ஏற்படும் வகையில் இத்திட்டம் இனி அமைய வேண்டும். பயன் பெறும் நிறுவனங்களின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்கு இடமின்றி இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், இந்தியாவிற்கு பெரும் பொருளாதார பலத்தை அளித்து தொழில் முனைவு புரட்சியை வேகமாக நடத்தி வரும் தமிழ்நாட்டை புறக்கணிக்காமல் இங்கு இருக்கும் பழங்குடியின தொழில்முனைவோரை பயனாளர்களாக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் டிட்வா புயல் கொட்டித் தீர்த்த தொடர் மழை!

தண்ணீர் உடனுக்குடன் வடிந்து, சென்னை மக்களை நிம்மதியடைய செய்தது!

முதல்வரின் மேலாண்மைக்கு சான்று – பொன்குமார் பாராட்டு!

சென்னை, டிச. 6 - தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி நிறுவனத் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டிட்வா புயல் காரணமாக தொடர்ச்சியாக கனமழை பெய்தும் ஒரு சொட்டு தண்ணீர் கூட சென்னை மாநகர சாலைகளில் தொடர்ந்து நீடிக்காமல், உடனுக்குடன் வடிந்து, மக்களுக்கு எந்த விதத் தொந்தரவும் தராத நிலைக்கு முதலமைச்சருடைய மேலாண்மைக்கும் அரசின் செயல்பாட்டிற்குமான சான்றாகும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவதற்கு முன்பு ஓரிரு நாள் மழை பெய்தாலும் பல நாட்கள் தண்ணீர் வடியாமல், மக்கள் படகுகளில் செல்லக் கூடிய அவலத்தை எல்லாம் பார்த்த சென்னை மாநகரம், தற்போது தொடர் மழை பெய்தும் மழைநீர் வடிவதில் எந்த பிரச்சனையும் இல்லாத நிலை கண்டு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைகின்றனர். இதற்கு காரணம் முதலமைச்சரின் மேலாண்மையின் கீழ் அரசு நிர்வாகம் எடுத்த தொடர் நடவடிக்கையேயாகும்.

இந்த டிட்வா புயல் மற்றும் தொடர் மழையின் காரணமாக ஒரு சில, மிக தாழ்வான இடங்களில் நின்ற தண்ணீர் கூட மாநகராட்சி நிர்வாகம் மின்னல் வேகத்தில் ராட்சமின் மோட்டாரை கொண்டு அந்த தண்ணீரை அகற்றியது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும். மரங்கள் விழுந்தால் அடுத்த ஓரிரு மணி நேரத்தில் அது அகற்றப்பட்டது. மின்சாரம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இப்படி இந்தத் தொடர் மழையால் சென்னை மாநகர மக்களுக்கு எந்த பிரச்சனையும் ஏற்படாமல் மிகச் சிறப்பாக மேலாண்மை செய்த அரசு, சென்னை மாநகராட்சிக்கு சென்னை வாழ் மக்கள் பாராட்டுதலைத் தெரிவித்து வருகின்றனர்.

இப்படி பேரிடர் கால நிவாரண பணிகளை திட்டமிட்டு மேற்கொண்டு அதில் வெற்றி கண்டுள்ள முதலமைச்சரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது.

இவ்வாறு அவா தெரிவித்துள்ளார்.